செ.வெ.எண்:38 நாள்:17.05.2018

# பத்திரிகைச் செய்தி

கரூர் மாவட்டம், கரூர் நகரில் அமைந்துள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் வைகாசி பெருவிழா 14.05.2018 முதல் 10.06.2018 வரை நடைபெறவுள்ளது. இதன் முக்கிய நிகழ்வான கம்பம் அமராவதி ஆற்றுக்கு அனுப்பும் நிகழ்ச்சி 30.05.2018 புதன்கிழமை அன்று நடைபெற உள்ளது. எனவே, இந்நிகழ்வு நடைபெறவுள்ள 30.05.2018 (புதன் கிழமை) அன்று மட்டும் கரூர் மாவட்டத்திற்கு உள்ளூர் அரசு விடுமுறை என கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உள்ளூர் விடுமுறை நாளான 30.05.2018 ஆனது செலாவணி முறிச்சட்டம் 1881-ன் கீழ் (**Under Negotiable Instrument Act 1881**) அறிவிக்கப்படவில்லை, ஆதலால் இந்த விடுமுறை நாளுக்குப் பதிலாக 02.06.2018 சனிக்கிழமை அரசு வேலை நாளாக அறிவிக்கப்படுகிறது என்றும் கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கரூர்.